www.tamilarangam.net


# பெண்கள் செய்தி மடல்

## சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்

மடல் - 5:4 மார்கழி 2003


பொருளடக்கம்


பெண்கள் மீதான வன்முறைகளை ஒழிப்பதற்கான...

கிராமிய பெண்கள் குழுக்களின் ஒன்றுகூடல்

முகாமைத்துவ பயிற்சி பட்டறை

நாங்கள் "அரசியலில்" பங்கேற்றல்?...

சமூகப் பொருளாதார சூழல் அபிவிருத்தி....

இலங்கையின் வட கிழக்கிற்கு சர்வதேச பெண்கள்...


**இதயமெனும் இல்லத்தில்**
**சிறையிருக்கும்**
**சிந்தனைக் குதிரைகளை**
**திறந்து விடுங்கள்**
**வேண்டும் இடம் சென்று**
**சீர் திருத்த வாதியாய்**
**திரும்பி வரட்டும்**

*ஆசிரியை*

## பெண்கள் மீதான வன்முறைகளை ஒழிப்பதற்கான செயல்வாதம். 25 நவம்பர் - 10 டிசம்பர்.

கோசங்கள், மேடைகள், பேச்சுக்கள், பிரச்சாரங்கள்.... இன்னும்... இன்னும்...நிகழ்வுகளில் உரிய நாள் முடிந்துவிடும். சூடு பிடித்த நிகழ்ச்சிகள் எல்லாம் முடித்த களைப்புடன் மீட்டிப் பார்க்க கூட நேரமில்லாமல் மிகுதி வேலையில் நாள் பறக்கும். தெருவோரங்களில் நடப்பட்டிருக்கும் செய்திக் கம்புகள் மட்டும் மழையில் கரைந்து, வெயிலில் வெழுத்து பார்க்கும் போது கடந்த தினத்தை நினைவூட்டும். எல்லை கடக்க மனம் அடுத்ததை நினைக்கும். நாள் ஓட, மாதம் ஓட, ஒரு வருடமும் ஓட பழயபடி தினங்கள் எல்லாம் புத்துயிர்க்கும். மீண்டும் புதிய புதிய ஏற்பாடு ஒவ்வொன்றிற்கும் ஒரு வரலாறு. அவ்வரலாற்றில் ஒன்றாய்."கனடாவில் தேநீர் விடுதியில் சில மாணவிகள் சக மாணவன் ஒருவனால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம்" இதற்காக அல்ல இப்படியான பெண்களுக்கெதிரான வன்முறைகள் இனி மேலும் நடக்க கூடாது என்பதற்காக நவம்பர் 25தொடக்கம் டிசம்பர் 10 வரையான நாட்களில் அனுட்டிக்கப்படுவதே பெண்கள் மீதான வன்முறைகளுக்கு எதிரான சர்வதேச தினம்.



வன்முறைகள் இல்லாத வீடும், நாடும் எமக்கு வேண்டும்.

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அடியோடு ஒழிக்கப் பட வேண்டும் எனும் உயிர்த்துடிப்பின் வேகத்தில் ஒவ்வொரு பெண்கள் நிறுவனமும் ஒவ்வொரு தொனிப் பொருளில் பல நிகழ்வுகளை நடத்தும்.

"வன்முறைகள் இல்லாத வீடும் நாடும் எமக்கு வேண்டும்" என்னும் தொனிப் பொருளில் நிகழ்வுகளில் ஒன்றாய் சந்திக்கு சந்தி,மூலைக்கு மூலை சகல அலுவலகங்களிலும் எமது சூரியா நிலைய அலுவலகர்கள் துண்டுப் பிரசுரம் வினியோகிக்கும் இந் நாட்களில் அவர்கள் சந்திக்கும் துயர்கள் அலுவலகம் வந்து அழும் காட்சிகள்.

"நான்கு பிள்ளைகளின் தாய், நான்கு வெறியர்களால் நடு இரவில் பாழடைந்தஎதிர் வீட்டுக்கு இழுத்துச் செல்லப்பட்டு அவர்கள் பாலியல் இச்சை முடிந்ததும் அவர்களால் கழுத்து நெரித்து, திருகிகொலை செய்யப் பட்டு மரத்தில் ஆடையில்லாமல் தொங்க விடப்பட்டது." வயிறு வலிக்க சொல்லி அழும் தாய்... ,

"தினம் தினம் அடித்து துன்புறுத்தும் கணவனால் தானும் தம் மகனும் கொல்லப் பட்டு விடுவோமோ" பயத்தில்

www.tamilarangam.net



செத்துப் பிழைத்து வந்திருப்பதாய் சொல்லி அழும் மற்றோர் பெண்...," "கணவன் கத்திக் குத்துக் குள்ளாகி தப்பிப் பிழைத்து, அவனால் எரியூட்டிய வீட்டிற்குள் இருந்து பொசுங்கிப் போகாமல் மீண்டும் தப்பிப் பிழைத்து நீதி மன்றம் சென்று அடுத்த தவணை திகதியை மட்டும் பெற்று களைத்துப்போய் எம் அலுவலகத்தில் குந்தி யிருக்கும் இன்னொர் பெண்...," ஒரு தினம் போதாது இவர்கள் துன்பம் பேச.

"தந்தை தான் தான் என நிருபிக்கும் ஒரே சாட்சியான 40 நாள் பிஞ்சு பாலகனை நஞ்சு ஊசி போட்டு கொலை செய்த பாதகன் கொடுமை....

"மகளை பாலியல் துஸ்பிரயோகத்துக்கு உட்படுத்திய தந்தைக்கு எதிராய், ஒரே சாட்சியாய் இருந்த பிள்ளையின் பாட்டி இறந்த இரகசியம் இன்னும் புரியாமல் அவள் பாடை மட்டும் தூரத்துக் காட்டில் கவிழ்ந்து கிடந்த காட்சி....

இவ்வாறு சாட்சிகள் சாம்பலாகிப் போன துயரத்தின் வெம்மை தனியாமலே .....

எமது அடுத்த நிகழ்வு முச்சக்கர வண்டியில் ஒலி பெருக்கி மூலம் அறிவிப்பு.



"பெண்களுக்கெதிரான வன்துறைகள் இல்லாத சமுகத்தை உருவாக்குவோம்"

"பெண்களுக்கு எதிரான வன்முறைகள் மறைக்கப்பட வேண்டியவை அல்ல,நிறுத்தப்பட வேண்டியவை"
இவ்வாறு தொடரும் விழிப்புணர்வு அறிவிப்புக்கள்

ஒவ்வொரு இரவிலோ, பகலிலோ, எங்கோ ஒரு பெண்ணை வன்முறைக்குட்படுத்திக் கொண் டிருக்கும் இப் பூமியில் "மனிதனை விட்டுவைப் பதை விட நட்டு விடுவது மேல்"எனும் மனதுடன் மனிதர்களாய் .....நாம்......




"வன்முறைகள் இல்லாத வீடும் நாடும் எமக்கு வேண்டும்" எனும் செய்திப் பலகை நடும் நிகழ்வு அடுத்து இடம்பெற்றது.

இவ்வாறு மண்ணில் நடும் கம்பங்கள் மனித மனங்களில் வேரூண்டி வன்முறைகள் அற்ற சமுதா யத்தை உருவாக்கவேண்டும் எனும் நோக்கத்தை அடைய, தடைகள் உடைத்து சுற்றும் பூமி நிற்கும் வரை பெண்கள் குரல்கள் ஒலித்துக் கொண்டே இருக்கும்.........

- விஜயலட்சுமி சேகர்

பெண்களுக்கெதிரான வன்முறைகள் அனைத்தும் நிறுத்தப்படவேண்டும் என்ற விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் நோக்குடன், சர்வதேச பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு வாரத்தை முன்னுட்டு மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டத்தை சேர்ந்த பெண்களுக்கு எதிரான வன்முறைகளை முடிவுக்கு கொண்டு வருதல் வலைப்பின்னல் 11 அமைப்புக்களால் "பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அபிவிருத்திக்கு ஓர் தடை" "பெண்களுக்கு எதிரான வன்முறைகள் மறைக்கப்படவேண்டியவை அல்ல நிறுத்தப் படவேண்டியவை" என்னும் கருவில் அமைந்த செய்திக்கம்பங்கள் 15 இடங்களில் நடப்பட்டது



www.tamilarangam.net

# கிராமிய பெண்கள் குழுக்களின் ஒன்றுகூடல்




கிராமிய பெண்கள் குழுக்களின் வருடாந்த ஒன்று கூடல் அக்கரைப்பற்று சுவாட் பயிற்சி நிலையம் தம்பட்டையில் 3.11.03 அன்று நடைபெற்றது. இவ் ஒன்றுகூடலில் முறக் கொட்டாஞ்சேனை பெண்கள் முன்னேற்ற சங்கம், இருதயபுரம் சினேகிதிகள் சங்கம், ஆரையம்பதி சங்கம், நாவற்குடா உழைக்கும் மாதர் சங்கம், சக்திகுழு, புதுக்குடியிருப்பு உப கலாசாரக் குழு, டச்பார் உபகலாசாரக் குழு, தாண்டியடி உபகலாச்சாரக்குழு பாடினிகள் குழு ஆகிய குழுக்களைச் சேர்ந்த பெண்கள் கலந்து கொண்டனர்.

இவ் ஒன்று கூடல் மூலம் ஒரு குழுவைச் சேர்ந்த பெண்கள் ஏனைய குழுக்களின் பெண்களை ஒரே இடத்தில், ஒரே சந்தர்ப்பத்தில் சந்தித்து பரஸ்பரம் தங்கள் அநுபவங்களை பகிர்ந்து கொள்ள முடிவதுடன் தமது செயற்பாடுகளின் உத்திகளை ஒப்பிட்டு நோக்கவும், மாற்றியமைக்கவும் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளவும் முடிகிறது.

முக்கியமாக கிராமிய பெண்களின் வாழ்க்கையும், படித்துவிட்டு திருமணமாகி வீட்டிலிருக்கும் பெண்களின் வாழ்வும் அவர்களைச் சுற்றிய எந் நிகழ்வும் சமையல் எனும் மையப் புள்ளியை வைத்தே சிறு வட்டமாக சுற்றி வருகிறது.

இவ்வட்டத்தை விட்டு பெண்கள் ஒரு பொழுதேனும் வெளிவரவும் வீட்டுவேலை, சமையல், பிள்ளைப் பராமரிப்பு, போன்ற வேலைகளை ஆண்களுக்கு பரஸ்பரம் பகிர்ந்து கொடுத்துக் கொள்ள சந்தர்ப்பம் வழங்குவதாகவும் இவ் ஒன்று கூடல் அமைகிறது.

வருடா வருடம் இவ் ஒன்று கூடல் மூலம் பெண்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி வருவதுடன், பெண்களின் உள உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தவும், குழுவின் ஒற்றுமையை வலுப்படுத்தவும் சமயோசித ஆற்றலை பயன்படுத்தவும் பல நிகழ்வுகள் இடம் பெறுகின்றன. இவ்வருடம் சமாதான சூழலின் பின்பும் பெண்களின் வாழ்தலில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதா? எனும் கேள்வியை தோற்றுவிக்கும், காற்றே சாட்சியாக நாடகமும் தொடராக சங்ககுழுக்களின் கலந்துரையாடலும் இடம் பெற்றது. கலந்துரையாடல் முடிவாக நாடகத்தில் மேலும் சேர்க்க கூடிய பெண்களுக் கெதிரான வன்முறைச் சம்பவங்கள் பற்றி பெண்களால் கூறப்பட்டது.

அடுத்து வெளிநாட்டில் இருந்து வரும் பொருட்களால் நன்மை ஏற்படுகிறது/ வெளிநாட்டில் இருந்து வரும் பொருட்களால் தீமை ஏற்படுகிறது. எனும் தலைப்பிலான விவாதம் இடம் பெற்றது. தற்போது எமது சூழலை அதிகம் தாக்கும் வெளிநாட்டுப் பொருட்களின் வருகையினால் ஏற்படும் பாதகத் தன்மை பற்றிய விவாத்தின் சிறுதொகுப்பை தருகின்றோம்

**வி**வசாயத்தின் போது பாரிய இயற்திரங்கள் பாவிப்பதால் நிலம் சேதமடைகிறது

**கி**ருமி நாசினி பாவிப்பதால் நிலத்தின் இயல்பு தன்மை மாற்றமடைகிறது.

**வெ**ளிநாட்டுப் பொருட்களின் வருகையால் உள்நாட்டு வளம் வீணாகிறது, உள்நாட்டு உற்பத்தி குறைகிறது உள்ளூர் தொழில், தொழில் பயிற்சி இல்லாமை ஏற்படுகிறது. உள்ளூர் வளம் சுரண்டப் படுகிறது, இயற்கை பாதிப்படைகிறது.

**சு**வையூட்டிகளால் உணவு நஞ்சடைகிறது, ஒவ்வாமை ஏற்படுகிறது.

**வெ**ளிநாட்டு மருந்துகளால் உள்ளூர் மருத்துவம் பாதிப்படைகிறது.

**அ**ழகுசாதனப் பொருட்களால் பிற்காலத்தில் பக்க விளைவுகள் ஏற்படுகிறது




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முகாமைத்துவ பயிற்சி பட்டறை

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலைய அலுவலகர்களுக்கும் கலாசார குழு உறுப்பினர்களுக்குமான முகாமைத்துவ பயிற்சிப் பட்டறை 15 - 18. 10 2003 ஆகிய காலப் பகுதியில் நடைபெற்றது. இதன் வழங்குனர்களாக ஜே.பெனடிற், ஏ.எம்.அபேரெட்ண ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவ்வகுப்பில் தொடர்பாடல் முறைகள் அது சம்பந்தமான பிரச்சினைகள், பிரச்சினைகளை முன்னுரிமைப் படுத்தும் முறைகள், ஆய்வு முறைகள், தீர்மானங்களின் வகைகளும் எடுக்கும் முறைகளும், ஆழுமை போன்ற விடயங்கள் பார்க்கப்பட்டது. இதில் முக்கிய விடயங்களின் தொகுப்பு பின்வருமாறு.



**தொடர்பாடல்**
**தொடர்பாடல் முறைகள்**

1. தங்களுக்குள்ளேயே ஆலோசனை செய்தல் (Intra persanal communi cative)

2. இருவருக்கிடையே தொடர்பாடல் (Inter persanal)

3. குழு கலந்துரையாடல் (Group communicative)

4. வெகுஜன தொடர்பாடல் (Mass communicative)

5. சர்வதேச தொடர்பாடல் (Space communicative)

**பங்கேற்பு தொடர்பாடல்**

செய்தி மட்டும் முக்கியமல்ல அர்ப்பணிப்பு கட்டாயம் வேண்டும். மற்றும் நம்பிக்கை வரும்படி நடத்தல் வேண்டும்.

நாம் கொடுக்கும் செய்தி அடுத்தவரின் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்தினாலேயே எமது தொடர்பாடல் சரி என நாம் கொள்ளலாம்

**ஆய்வு முறைகள்**
**நிறுவன வெளிசார்ந்த சூழல் ஆய்வு**

இவ் ஆய்வில் வெளிசார்ந்த சூழலை உணர்ந்து அதைத் தொகுத்து பின் செயற்படுத்த வேண்டும். இதில் நிறுவனம் பின்வரும் அனைத்து விடயங்களையும் ஆய்வு செய்ய வேண்டும்.

| | |
|---|---|
| 1. சமூகம் | 5 சுற்றாடல் |
| 2. பொருளாதாரம் | 6 பால்நிலை |
| 3. அரசியல் | 7. தொழில் நுட்பம் |
| 4. கலாசாரம் | 8. ஊடகம் |

**சூழல் ஆய்வு ( context Analises)**

தற்போதைய நிலையை ஆய்வு செய்தலுடன் முன்னைய நிலையையும் ஆய்வு செய்து இதில் வரும் மாற்றத்திற்கான காரணத்தை ஆய்வு செய்ய வேண்டும். இதன் மூலம் எதிர்கால நிலையை உணரலாம்.

**பலம், பலவீனம், சந்தர்ப்பம்/ வாய்ப்பு, சவால்கள் (SWOT) ஆய்வு முறை**

**இரட்டை ஒப்பீட்டு ஆய்வு முறை**
**மரப்பகுப்பாய்வு**

இதில் 3 படிமுறைகள் உண்டு
1. நிலமைகள்
2. அறிவு / நம்பிக்கை
3. அரசியல் சமுதாய பொது காரணிகள்

1948இன் பின் இலங்கையில் மேற்கொண்ட அபிவிருத்தி திட்டங்களுக்கான இரு ஆய்வு முறைகள்
1. துரித கிராமிய ஆய்வு (R.R.A)
2. பங்கேற்பு கிராமிய ஆய்வு (P.R.A)

இவ் ஆய்வு முறைகளில் ஒன்றான துரித கிராமிய ஆய்வு முறையில் பின்வரும் குறைகள் காணப்பட்டன.

1. இட ரீதியான வரையறைகள்

2. செயற்திட்ட சார்புதன்மை

3. தனிநபர் சார்பு தன்மை

4. வரட்சிக்கால சார்பு தன்மை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

5. சமநிலைத் தொடர்புகளைப் பேணுவதில் உள்ள சார்பு தன்மை

இதன் காரணமாக 1992ம் ஆண்டு பங்கேற்பு கிராமிய ஆய்வு முறை (P.R.A) அறிமுகப்படுத்தப்பட்டது. இவ் ஆய்வு முறை மக்களுடன் சேர்ந்து மக்கள் தேவையை உணர்ந்து ஆய்வுசெய்யக் கூடியதாக உள்ளது.

இதன் அடிப்படை தூண்களாக பின் வருவன உள்ளன.

1. மனப்பாங்கும் நடத்தையும்
2. வழிமுறைகள்
3. பகிர்வு

மனப்பாங்கும் நடத்தையும் எனும் போது பின்வரும் அம்சங்கள் இதில் அடங்கும்

1. கோலை கையளியுங்கள் :- அதிகாரத்தையோ ஆதிக்கத்தையோ செலுத்தாது மக்களுடன் ஒன்றாகி விடல்

2. அதை அவர்கள் செய்வர் (மக்கள் மீதான நம்பிக்கை)

3. உங்களது சொந்த, சிறந்த தீர்ப்பை பாவியுங்கள்

4. உட்காருங்கள் :- மக்கள் நிலைக்கேற்ப மாறுதல்.

5. செவிசாயுங்கள்

6. கற்றுக் கொள்ளுங்கள்

7. கௌரவியுங்கள் :- ஒவ்வொருவருக்கும் தனிப் பட்ட ரீதியில் ஒவ்வொரு மதிப்பு உண்டு அதை நாம் மதிக்க வேண்டும்.

8. கற்றவற்றை விலக்குங்கள்: எமக்கு தெரிந்த விடயங்கள் சில சந்தப்பங்களுக்கு பொருந்தாது. ஆகவே அதைத் தவிர்க்க வேண்டும்
9. அமைதி பெறுங்கள்.
10. தவறுக்கு இடம் கொடுங்கள்
11. வசதி வழங்குங்கள்
12. அவசரப் படாதீர்கள்
13. அவர்களைக் கேளுங்கள்
14. மகிழுங்கள்
15. மக்களுக்கு விருப்புடையோராய் இருங்கள்

**அறைக் கட்டமைப்பு நேர்காணல் முறை (S.S.I)**
**இதன் முக்கிய விடயங்கள்**

1. ஆய்வு செய்ய செல்லும் குழுவிடம் ஆய்வு அட்டவனை இருக்க வேண்டும்.
2. குழுவிற்கு தமது நோக்கத்தில் தெளிவு இருக்க வேண்டும்
3. குழுவில் அடங்குபவர்கள் பற்றிய தயார் படுத்தல் வேண்டும்
4. பொறுப்புக்கள் பகிரப்பட்டிருக்க வேண்டும்.



5. தமது நோக்கத்திற்குரிய மக்களை அடையாளம் காண வேண்டும்.
6. சிறந்த அனுகு முறைகளை பாவிக்க வேண்டும்
7. கேள்விகள் பகிரங்கமாகக் கேட்கப்பட வேண்டும்

**குழுக்கலந்துரையாடல் ஆய்வின் முக்கிய அம்சங்கள்.**

1. செவி சாயுங்கள்.
2. தகவல் தருவோரை ஊக்குவித்தல்.
3. எளிமையான மொழி நடை.
4. நல்ல மெய் நிலையில் தோன்றுதல்.
5. பொருத்தமான உடைகளை அணிந்து செல்லல்.

**தவிர்க்க வேண்டியது.**
1. தூரமான ஆசனங்களில் அமர்தல்.
2. ஒரே தடவையில் பல கேள்விகள் கேட்டல்.
3. பல குழுவாகப் பிரிந்து கலந்துரையாடல் மேற்கொள்ளல்.
4. சிலர் மீது மட்டும் கவனம் செலுத்துதல்.
5. உணர்ச்சிகரமான கேள்விகளை கேட்பது.
6. வேறு மொழியில் பேசுவது.

ஓர் ஆய்வாளர் ஆய்வுசெய்தலின்போது தமது ஐம்புலன்களையும் பாவித்து ஆய்வு செய்தல் வேண்டும். மற்றும் தர்க்க ரீதியாய் சிந்திக்கவும் மொழியமைக்கவும் திறன் இருக்க வேண்டும்.

www.tamilarangam.net

## பிரச்சனை பற்றிய பகுப்பாய்வு

**பிரச்சினை என்றால் என்ன?**

மக்கள், சமூகங்கள், ஒதுக்கப்பட்ட குழுக்கள் மத்தியில் பிரதிகூலமான விளைவுகளை உண்டு பண்ணும் நிலைமை பிரச்சினை ஆகும்.

பிரச்சினை பற்றிய பகுப்பாய்வு என்பது பிரச்சினைகளையும் அதன் காரணிகளையும் அதன் விளைவுகளையும் அடையாளம் காணலும் அவற்றுக்கிடையிலான இடைத்தொடர்புகளை விளங்கிக் கொள்ளுதலும் ஆகும்.

பிரச்சனைகளை தேர்ந்தெடுத்து முன்னுரிமை படுத்தும் போது எமது பிரதேசம் சார்ந்ததும் எம்மால் முடியக் கூடியதும்,சமுகத் தேவைக்குட்பட்டதும், சமுகத்தால் தீர்க்க கூடியதுமான பிரச்சனைகளை முன்னுரிமைப்படுத்த வேண்டும்.

**பிரச்சனைகளுக்கான தீர்மானங்கள் பின்வருமாறு எடுக்கப்படுகிறது.**

1. மனதிற்கு விரும்பிய மாதிரி தீர்மானம் எடுத்தல் (சரியான முறை அன்று)
2. விடயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து காரணம் தாக்கம் எதிர்கால நிலமை போன்றவற்றை கருத்திற் கொண்டு எடுப்பது
3. அதிகாரத்தை பிரயோகித்தல்
4. அனுதாபம் பார்த்து தீர்மானம் எடுப்பது
5. உண்மை தன்மைக்காக தீர்மானம் எடுப்பது

தீர்மானம் எடுத்தலின் போது அதிகம் பிரச்சினைகளின் விளைவுகளுக்கே தீர்வு காணப்படுகிறது. ஆனால் காரணங்களுக்கே தீர்வுகாண வேண்டும். இல்லாவிட்டால் அப்பிரச்சினை நிலைத்திருக்கும்.



திருமதி. A. ஜெயராஜா
இல. 15, டயஸ் லேன்.

*அன்புடன் ஆசிரியைக்கு.*

*தங்களால் வெளியிடப்பட்ட பெண்கள் செய்தி மடலின் ஆனி - புரட்டாதி 2003 (மடல் 5:2- 5:3) இதழ் கரங்களில் கிடைக்கப்பெற்றது வாசித்தது மகிழ்ந்தேன். தங்களின் நிலைய, பெண்கள் அபிவிருத்திப் பணி குறித்து ஏற்கனவே நான் அறிந்து வைத்திருப்பதுடன், தங்களால் முன்னெடுக்கப்பட்டு செயலுருவம் பெற்றுவரும் அனைத்துச் செயற்பாடுகளும் வெற்றிகரமாக உருப்பெறவும், இதன்மூலம் அநேக பெண்கள் பயன்பெற வேண்டு மெனவும் தங்களை வாழ்த்துகிறேன். செய்தி மடலின் அனைத்து அம்சங்களும் வெகு அருமையாக எழுதப்பட்டுள்ளன. அவ்வப்போது நடாத்தப்பட்ட தங்கள் பணிகளின் செய்திகளும், பாடசாலையில் தன் பிள்ளையைச் சேர்க்கப் பாடுபட்ட ஓர் தாயின் குமுறலும், பெண்களுக்கான விழிப்பை வெளிக்காட்டி நிற்கும் கட்டுரையும், நமது தெருவோர அவலமும், மற்றும் அருமையான கவிதைகளும் என அத்தனையும், சீர்பொருந்தும் வகையில் தொகுக்கப்பட்டு வெயியிடப்பட்டுள்ளது. பாராட்டுக்கள்.*

*இவ்விதழின் 6ம் 7ம் பக்கத்தில் வெளியாகியிருக்கும் சே. விஜயலட்சுமியின் 'தெரு ஓர ஓலங்கள்' பற்றிய ஆதங்கக் கட்டுரை குறித்து, இக்கடிதத்தில் மிக விசேசமாகக் குறிப்பிட விரும்புகின்றேன். முதலில் அச்சகோதரியின் முன்னெடுப்புச் சிந்தனைக்காக மனதார நன்றி செலுத்துகிறேன்.*

*நான் பிறந்து வளர்ந்த காலத்திலிருந்து இவ்வீதியின் நிலைபற்றி நன்கறிவேன். மிக ஆரம்ப காலத்தில், இவ்வீதியில் வசித்த அத்தனை இல்லத்தாரும் வெகு நேர்த்தியாகவும், துப்பரவாகவும் பேணியே வந்த இவ்வீதி, கடந்த பல வருடங்களாகவே அதன் அழகிழந்து, தூய்மையிழந்து, அதன் நேர்த்தியிழந்து அச்சகோதரி எழுதியிருப்பதுபோல், கால் நடையாய் வருவோர் போவோருக்கும், வாகனங்களில் வந்து போவோருக்கும் பெரும் இடைஞ்சல்களை ஏற்படுத்தும் வகையில் குப்பை கூளங்கள், உடைந்த கான்கள், மலைபோல் குவிந்து அழுக்காகியிருக்கும் சந்தி, என எங்குமே அசுத்த மயமாகியிருப்பது குறித்து உண்மையில் நானும் மனம் வெதும்பியதுண்டு. இதுகுறித்து மாநகரசபை அதிகாரிகளுக்கும் செய்தி அனுப்பியதுண்டு. ஆனாலும் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.*

*அச்சகோதரியின் இவ்வாக்கம், இவ்வீதியிலும் இதனை அண்டிய ஒலிவ் வீதியிலும் (ஏனெனில் அவ்வீதியில் வசிப்போர்தான் இரவுநேரங்களில் அநேகமாக சந்தியில் குப்பைகளைக் கொண்டு வந்து கொட்டுவதைக் கண்டிருக்கின்றேன்) வசிக்கும் அத்தனை இல்லத்தாருக்குள்ளும் ஓர் தாக்கத்தை ஏற்படுத்தி, இனியாவது தத்தமது வீட்டு அசுத்தங்களை மிக நேர்த்தியாக ஓர் பையிலே போட்டுவைத்துத் தினமும் குப்பை பெருக்க வருகின்ற பணியாட்களிடம் ஒப்படைப்பார்களேயானால், இவ்வீதியின் பழைய அழகிய நிலையைக் காணமுடியும். இது தொடர்பாக, ஒருசில ஆலோசனைகளைத் தரலாமென நம்புகிறேன். தனித்தவர்களாக இதனைச் செய்வதைவிட, தேசியரீதியிலும், சர்வதேசரீதியிலும் ஓர் பிரபல்ய அபிவிருத்தி நிலையமாகத் திகழும் தங்களின்மூலம் இச்செயற்பாடு முனைப்புடன் உருப்பெறும்போது, அனைவரது ஒத்துழைப்பும் கிடைக்குமென உண்மையில் நம்புகிறேன்.*

தொடர்ச்சி -12ம் பக்கம்...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நாங்கள் "அரசியலில்" பங்கேற்றல் ?..

இந் நாட்டில் சமாதானத்திற்கு முன்னும், சமாதானத்திற்கு பின்னரும், பெண்ணின் சுயத்தன்மை, இருப்பு, பாதுகாப்பு பற்றிய.. கேள்விகளின் எண்ணிக்கை இன்னும் குறைந்தபாடில்லை. அதற்குரிய சந்தர்ப்பங்களை எங்காவது எவராவது உருவாக்க வேண்டும் என்ற அக்கறைக்குரிய குரல்கள் சமுகத்தில் செல்வாக்கு மிக்க எந்தத் திசைகளிலிருந்தும் ஒலித்ததாகத் தெரியவில்லை. ஒலிக்கின்ற குரல்களின் அதிர்வலைகள் இன்னொரு புறம் திசைதிருப்பபட்டுக் கொண்டேயுள்ளது.

இந் நிலையில் மகளீர் விவகார அமைச்சு ஆகஸ்ட் 26, 27ம் திகதிகளில் கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் "உள்ளூராட்சி மன்றநடவடிக்கைகளில் பெண்ணின் பிரதிநிதித்துவத்தை, பங்களிப்பை அதிகரிப்பதற்கான தேசிய மகாநாடு" ஒன்றை நடாத்தியது. அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றத்தில் அங்கத்துவம் செய்பவர்கள் எனப் பல்வேறு வகைப்பட்டோர் பங்கு பற்றினர்.

குழுநிலைப் பயிற்சிகள், விவாதங்கள், பேச்சுக்கள் என்பனவற்றோடு வழமையான மாநாட்டின் இறுதியில் "மாநாட்டுப் பிரகடனம்" ஒன்றும் நிறைவேற்றப்பட்டது.

இந்தப் பின்னணியில், இத்தகைய மகாநாடு குறித்த அனுபவங்களைப் பகிர்தலும், அவை தொடர்பான மதிப்பீடுகளைப் பெற, காணமுயல்வதும் ஏற்புடையதே.

அரசியல் என்பது சட்டமாக எழுத்துருவுக்கு வந்த பின்னரே பெண்கள் - ஆண்கள் என்ற பிரிவினை தோன்றியிருக்க வேண்டும். கருவிலிருந்து கல்லறை வரைக்கும் பெண்களின் இயக்கம், செயற்பாடுகள் யாவும் ஒரு வித அரசியலே என்பதை யாரும் அங்கிகரிப்பதில்லை. எப்போதும் சுழன்று கொண்டிருக்கும் பெண்களும் கூட தமது திசையின் வழியை இனம் காண்பதுமில்லை. அதற்கு முயல்வதுமில்லை. ஆனால் தமது அடையாளம், தமது இருப்பு, தமது அதிகாரம் குறித்து அதிக அக்கறையுடைய இயல்பைக் கொண்டு இயங்கும் ஆணின் அரசியலையே, பெண்கள் அனைவரும் தமக்குரிய அரசியலாகவே கருதுவதானது ஆணாதிக்கத்தின் வெற்றியே அன்றி வேறில்லை. நமது நாட்டில் பிரதேசத்திற்குப் பிரதேசம் இந்த அறியாமையின் அளவு வேறுபட்டுக் காணப்படுகின்றதோ என்று எண்ணுமளவிற்கு இம் மாநாட்டில் அவதானிக்கப்பட்ட அம்சங்கள் காணப்பட்டன.



தென்னிலங்கையின் அரசியல் சூழ்நிலையிலும், வடக்கு கிழக்கு வாழ் குறிப்பாக பெண்ணின் அரசியல் சூழலும் வேறுபாடு கொண்டவை. மாநாட்டில் இருவேறு அரசியல் சூழலில் இருந்தும் வந்த பெண்கள் கலந்து கொண்டார்கள். அனுபவங்கள் வேறுபட்ட நிலையில் இருக்கும் போது தீர்மானங்களிலும், கோரிக்கைகளிலும், ஒற்றுமையை எதிர் பார்க்க முடியாது. மகளீர் விவகார அமைச்சு என்பது முழு நாட்டிற்கும் பொதுவானதும் பொறுப்பானதுமான அமைப்பாகும்.

தென்னிலங்கையில் அரசியலில் ஈடுபடும் பெண்ணின் பிரச்சனைகள் அனைத்தும் அரசியல் சார்ந்த பிரச்சனைகளாகவே அமைவதோடு பெண்ணளுக்கான பொதுப் பிரச்சனைகளும் சேர்ந்தே காணப்படுகிறது. ஆனால் வடகிழக்கின் யுத்தப் பாரம்பரியமும், அரசியலலையும், வழக்காறுகளும்., "பெண்ணின் அரசியலில்" பங்கேற்றலை நிர்ணயிப்பனவாக அமைகிறது. "அரசியல் சூழல்" இனத்துவ ரீதியாக வடகிழக்கில் வரையறை செய்யப்படாத நிலையில் "பெண்கள்" என்ற பாலின ரீதியிலான அரசியல் பங்களிப்பும் ஈடுபாடும், எந்தளவில் சாத்தியமானது என்பதை சிந்தித்தல் அவசியம். மொத்த நாட்டிற்குமான ஒரு அமைச்சு, பிரதேச ரீதியான "ஒரு சில "சாத்தியங்களைக் கொண்டு நாடளாவிய ரீதியான தீர்மானங்களை நிறைவேற்ற முடியாது என்பதை மாநாட்டில் கலந்து கொண்ட வடக்கு கிழக்கு சார்ந்தவர்களின் கருத்துக்கள், அனுபவங்கள், பகிர்வின் போது உணர்த்தப்பட்டன

பெண்களை உள்ளூராட்சி மன்றங்களில் ஈடுபடுத்தலானது தென்னாசிய நாடுகளில் இலங்கையிலேயே மிகக் குறைந்தளவிலேயே உள்ளது. கல்வி நிலையில் மிக உயர்ந்த தரத்தில் இருக்கும் இலங்கையில், அதுவும் மொத்தச் சனத் தொகையில் 53%ஐ கொண்டிருக்கும் பெண்களின் தொகையில் இலங்கை அரசியலில் ஈடுபடும் பெண்களின் வீதம் மிகமிகக் குறைந்த அளவில்

www.tamilarangam.net

இருப்பது வேதனையானது. அத்தோடு ஒப்பீட்டளவில் கல்வி மற்றும் பொருளாதார நிலையில் பின் தங்கியுள்ள பங்களாதேஷ், பாக்கிஸ்தான் போன்ற நாடுகளை விடவும் மோசமான நிலையிலுள்ளது என்பதையும் விரிவுரைகளின் போது சுட்டிக் காட்டப்பட்டது. ஆயினும் இலங்கை போன்ற எமது நாட்டில் இதனை இத்தனை தாமதமாக நாம் ஏன் உணரத்தலைப்பட்டோம் என்பதோடு அவற்றின் பின்னனி என்ன என்றும் கேள்விகள் எழுப்பப்பட்டன. அரசியல் முறை மாற்றப்பட வேண்டும் என்பதோடு, அது சம்பந் தமான சகல விடயங்களிலும் சம்மந்தப்பட்டவர்கள் கவனம் செலுத்த வேணடும் என்றும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது

பின்வரும் காரணங்கள் பெண்கள் அரசியலில் பின் நிற்பதற்கு ஏதுவாக உள்ளதாக ஆய்வுக்கட்டுரை களில் குறிப்பிடப்பட்டன.

1. இரட்டைசுமை - குடும்பம்
   - தொழில்
2. ஆணாதிக்கம்
3. அரசியலில் பிரதிநிதித்துவத்தை தரும் நியமனப் பிரச்சனை (குடும்பம், உறவு பரம்பரை)
4. தேர்தல் வன்செயல்
5. அரசியலுக்கான கீழ் மனநிலை
6. தேர்தல் வன்செயல்
7. அரசியல் நேரடியாக உடலுள பாதிப்பை தரத்தக்கதாக அமைதல்.
8. குடும்பத்தின் மூலமாக அரசியலுக்கு வருதல்.
9. சுயமுயற்சி ஊடாக அரசியலுக்கு வருதல்.
10. சாதிப்பிரச்சனை.
11. தேர்தல் செலவு அதிகம்.
12. பெண்களின் பிரச்சனைக்கான குரலுக்கு முக்கியத்துவமின்மை.
13. அரசியல் நடை முறை பற்றிய அறிவின்மை

போன்ற காரணங்களால் பொதுவாக பெண்கள் அரசியலில் ஈடுபடுதல் குறைவடைவதாக ஆய்வுகளில் குறிப்பிடப்பட்டது. எனவே பெண்கள் அரசியலில் ஈடு படுவதனை அதிகரிக்க வேண்டுமாயின் மேற்குறித்த பிரச்சனைகள் களையப்பட வேண்டும். என்பதே ஏகோ பித்த கருத்தாக இருந்தது. எனினும் மிக முக்கியமாக இங்கு குறிப்பிடத்தக்க ஓர் விடயம், பொதுவான தடைகளுக்கான காரணங்களைவிட, வட கிழக்கு போன்ற நீண்டகால இன யுத்த பாரம்பரியத்தினை உடைய சூழல் கூட பெண்கள் அரசியலில் ஈடுபடுவதற்கு சிரமானது என்பதும் குறிப்பிடத்தக்கது.

**-T.உருத்திரா-**

## சமூகப் பொருளாதார சூழல் அபிவிருத்தி நிறுவனத்துடனான நேரடிச் சந்திப்பும் அதன் அனுபவப் பகிர்வும்.



சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத் தினால் அமைக்கப்பட்ட கிராமிய பெண்கள் குழுக் களின் செயற்பாடுகளை மேலும் மேம்படுத்தும் பொருட்டும் ஏனைய நிறுவனச் செயற்பாட்டாளர் களின் மக்களுடனான அணுகுமுறை நுட்பங்களை அறிந்து கொள்ளும்நோக்குடனும் சூரியா கிராமிய பெண்கள் குழு இணைப்பாளர் மல்லிகா வவுனியாவில் உள்ள சமூக பொருளாதார சூழல் அபிவிருத்தி நிறு வனத்திற்கு (Seed) 15-18/09 2003 காலப்பகுதியில் சென்றிருந்தார்.

அங்கு போர்க்கால சூழலில் பாதிப்புற்ற மக்களையும், அவர்களுக்காக வேலை செய்யும் அலுவலகர்களையும் அவர்களுடைய அனுபவங் களையும் தொகுத்து வழங்கினார்.

சமூகப் பொருளாதார சூழல் அபிவிருத்தி நிறுவனத்தின் திட்டங்கள் (ச.பொ.சூ.அ)

1. வலுவூட்டல் வளாகம் - விஷேட தேவைக்குட்பட்ட மாணவர்களுக்கானபாடசாலை (அங்கவீனமுற்றோர்)
2. சமூகம் சார் புணர்வாழ்வுத் திட்டம்:– விஷேட தேவைக் குட்பட்டவர்களுக்கான சமூகம் சார் புணர் வாழ்வு.
3. புதிய கோயில் குளம் மீள் குடியேற்றத் திட்டம்:- நலன் புரிநிலையங்களில் வாழ்ந்த பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட 65 குடும்பங்களை ‘புதிய கோயில் குளம்“ எனும் கிராமத்தில் குடி யேற்றி சமூகப் பொருளாதார வேலைகளில் ஈடு படுத்துதல்.

www.tamilarangam.net

4. தாலிக் குளம் மீள் குடியேற்றத் திட்டம் :- நலன் புரிநிலையங்களில் வாழ்ந்த பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட விசேட தேவைக்குட்பட்ட வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் 150 குடும்பங்களை " தாலிக் குளம்" எனும் கிராமத்தில் குடியேற்றி சமுகப் பொருளாதார வேலைகளில் ஈடுபடுத்துதல்.

5. பெண்களை வலுவூட்டல் திட்டம் :- சிதம்பரபுரம் நலன் புரிநிலையத்தில் வாழும் பெண்களை குழுவாக்கி வலுவூட்டி அவர்களை சுயமாக இயங்க ஊக்குவித்தல்.

இந் நிறுவனம் தம் நோக்கத்தை அணி அணியாக செயற்படுத்துவதுடன் கிராமங்களில் தங்கள் வேலைகளை செயற்படுத்துவதற்கு கிராம ரீதியான தகவல்களைப் பெறுவதற்கும் சில இடங்களில் தொண்டர்களை வைத்து செயற்பட்டு வருகிறார்கள்.

வலுவூட்டல் திட்டத்தின் வலுவூட்டல் வளாகம் என்பது விசேட தேவைக்குட்பட்ட 65 பிள்ளைகளை கொண்டது. இவர்களுடன் வேலை செய்யும் ஆசிரியர்கள் தங்களை அர்பணித்து வேலை செய்வதுடன் பொறுமை, விட்டுக் கொடுப்பு, நிதானம், நேர்மை, புரிந்துணர்வு போன்ற குணங்களுடன் பிள்ளைகளை அணுகுகிறார்கள்.

சிதம்பரபுரம் என்ற இடத்திற்கு சென்ற போது அங்கு முகாம்களில் மக்கள் பல சிக்கல்களுடன் வாழ்வதை காணமுடிந்தது. இங்கு வாழும் பெண்கள், தலைமை தாங்கும் 10 குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கு சுயமாக சிந்திக்கவும், பிரச்சனைகளை இனம் காணவும், அவர்களுக்கு கூட்டங்கள், கலந்துரையாடல்கள், பயிற்சிப்பட்டறைகள் என்பன நடத்தப் படுகின்றன.

முகாமில் வாழ்ந்து வரும் பாலசுப்பிரமணியம் இராமசாமி 55 வயது மதிக்கத்தக்க பெண் கூறியது ஆரம்பத்தில் சீட் (Seed) நிறுவனத்துடன் இணைந்து கூட்டங்களில் கலந்து கொள்ளும் வேளையில் கூச்சம், பயம், சமுகத்தின் கேலிப் பேச்சு என்பன இருந்தது. இவைகளைத் தாண்டி வெளியில் வருவதற்கு இந் நிறுவனம் உதவியாய் இருந்ததுடன் எங்கள் தேவைகளை இனம் காண்பதற்கும், நிறுவனம் வழிகாட்டியாக இருந்தது. இதன் மூலம் நாம் 10 பெண்கள் அரசாங்க அதிபரை சந்தித்து, கிராமத்திற்கு ஒரு ஆட்டோ உட்பட பாடசாலை, தபாற்பெட்டி, பிறப்பு சான்றிதழ்கள், பாலர் பாடசாலை போன்ற வசதிகளைப் பெற்றுள்ளோம், பெற்றோர்களாகச் சேர்ந்து வேலிகளை அமைக்கின்றோம்.... . இவருக்கு முகாம்களில் வாழ்கிறோம் என்ற தாக்கம் இருந்தாலும், தங்கள் வேலைகளை தாங்களே நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை இருப்பதை உணர முடிந்தது.



அடுத்தடுத்து கிராமங்களிலும் முகாம்களிலும் வாழும் மக்களையும் அவர்களுக்காக சேவையாற்றும் அணியினரையும் சந்தித்த போது "எம்மை நாம் யார் என்று அறிய வேண்டும், அடுத்து எம்மிலும் பிறறிலும் நம்பிக்கை வேண்டும். எம்முடன் வேலை செய்பவர்களுடன் நாம் நம்பிக்கையுடனும், புரிந்துணர் வுடனும் நடந்தால் ஒரு குடும்பமாக வேலை செய்ய முடியும்.

ஒரு காலத்தில் சீட் (Seed) இல்லா விட்டாலும், சுயமாக இயங்கக் கூடிய ஆற்றலும், மனப்க் குவமும் இன்று எங்களிடம் உள்ளது எனக் கூறினார்கள். தங்கள் செயற்பாடுகள் வெற்றிகரமாய் முடிவ்தற்கு காரணம், அலுவலகர்கள் தங்கள் செயற்பாடுகளை கூறும் போது நிர்வாகம் ஆலோசனை வழங்கி, நாங்கள் செய்வதை விட வேலை செய்யும் அணியினரே கூடி தீர்மானம் எடுத்து செயற்படுவது சரியானதாக இருக்கும் என அவர்களுடய அனுபவங்களைக் கூறினார்கள்.

நிறுவனத்தில், நிர்வாகம், அலுவலகம் என்ற வித்தியாசம் இல்லாமல், பெரியவர் சிறியவர் என்ற பாகுபாடு இல்லாமல் சமமாகப் பழகினார்கள். வேலைகள் தொடர்பாக எந்த அலுவலகர்களுடனும் சலிப்புத் தன்மை இல்லாமல் நண்பர்களாகவும் மனிதனை மனிதனாக மதித்து நண்பனாகவும் பழகும் தன்மையுடன் அனைவரும் இயங்குவதை அவதானிக்க முடிந்தது





www.tamilarangam.net

# இலங்கையின் வட கிழக்கிற்கு சர்வதேச பெண்கள் குழுவின் வருகை
## 2002 ஒக்டோபர் 12ஆம் திகதி முதல் 17ம் திகதி வரை

இலங்கையில் நீண்ட காலமாக இடம் பெற்று வரும் இன மோதலுக்கு, பேச்சுவார்த்தைகளின் மூலம் அரசியல் தீர்வொன்றை எய்துவதற்கு பெண்கள் நீண்டகாலமாக உழைத்து வருகின்றனர். எனவே 2002ம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே கைச்சாத்திடப்பட்ட போர் நிறுத்த உடன் படிக்கையை வரவேற்றதுடன் இடம் பெற்று வரும் சமாதானச் செயல் முறையிலும் பெண்கள் ஈடுபட்டு வேலைசெய்வதென்று பெண்கள் அமைப்புக்கள் திடசங்கற்பம் கொண்டனர். இந்த அடிப்படையில் இலங்கையிலுள்ள பெண்கள் அமைப்புக்கள் பல, பெண்கள் தொடர்பு ஊடகங்களுக்கான கூட்டமைப்புடன் இணைந்து இலங்கையின் வடகிழக்குச் செல்வதற்கு சர்வதேச பெண்கள் குழுவொன்றை ஏற்பாடு செய்வதற்கு உதவின.

சமாதானச் செயன்முறையில் பெண்கள் தொடர்பான கரிசனைகளை சேர்த்துக் கொள்வதுடன் மோதல் தீர்வுக்கும் சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கும் பால்நிலைப்பாட்டுக் கட்டமைப்பு பற்றிய அடிப்படை அம்சங்கள் உள்ளடக்கப்படுவதற்கும் இது தொடர்பான மதிப்பீடுகளை மேற் கொண்டு திடமான விதப்புரைகளை முன்நிலைப்படுத்துவதற்குமென இச் சர்வதேச பெண்கள் குழு அமைக்கப்பட்டது. இக் குழுவில் 16 இலங்கையரும் சர்வதேச நாடுகளைச் சேர்ந்த 6 பேரும் அடங்குவர் இவர்கள் பெண்களின் உரிமைகள், மனித உரிமைகள், சமாதானம் ஆகிய துறைகளில் நீண்ட காலம் பணிபுரிந்தவர்கள் ஆவர்

இச்சர்வதேச தூதுக்குழுவின் பல்வேறு அணிகளும் பின்வரும் பிரதேசங்களுக்கு விஜயம் செய்தனர். யாழ்ப்பாணம், ஊர்காவற்துறை, கிளிநொச்சி, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, புத்தளம், மன்னார் அத்துடன் பொலனறுவை மாவட்டத்திலுள்ள எல்லைக் கிராமங்களுக்கும் விஜயத்தை மேற்கொண்டு வெவ் வேறு சமூகங்களையும் பல்வேறு சமூகமட்டங்களையும் சேர்ந்த பரந்தளவிலான ஆண்களுடனும் பெண்களுடனும் பேசினார்கள்.

வடகிழக்கிற்கு விஜயம் செய்த இச் சர்வதேச பெண்கள் குழுவின் அறிக்கையின் முடிவுகளையும் சிபார்சுகளையும் பெண்கள் தொடர்பு ஊடகங்களுக்கான கூட்டமைப்பு ‘பெண்களின் அக்கறைகளும் சமாதானச் செயன்முறையும்’ எனும் பெயரில் வெளியீடு செய்தது அவ் வெளியீட்டின் முழு விடயங்களையும் எமது பெண்கள் செய்திமடல் மூலம் வெளியிட முடியா விட்டாலும் அவர்களது சில சிபார்சுகளைத் தருகின்றோம்.




**1. புரிந்துணர்வு உடன்படிக்கை**
மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச தரங்களையும் பெண்களின் உரிமைகள் பிள்ளைகளின் உரிமைகள் உட்பட மனிதாபிமான சட்டங்களையும் உள்ளடக்க வேண்டும்.

**2. தகவல் பெறும் உரிமைகள்:-** இலகுவாக அடையக் கூடிய முறைசார் அல்லது முறைசார தொடர்பாடல் வழிகளினுடாக புரிந்துணர்வு ஒப்பந்தம் பற்றியும் சமாதானச் செயல்முறை பற்றியும் மிகச் சரியான தகவல்கள் சமுதாய மட்டத்திற் பரப்பப்பட வேண்டும்.

**3. நின்று நிலைக்கக் கூடிய தன்மை :-** பெண்கள் நம்பிக்கையுடனும் பாதுகாப்புடனும் பயணம் செய்வதற்கு வழிவகுக்கும் பொருட்டு மக்கள் குடியிருக்கும் பிரதேசங்களிலுள்ள சகல இராணுவப்பரிசோதனை நிலையங்களும் அகற்றப்படவேண்டும்.

உயர் பாதுகாப்பு வலயங்களின் தேவைபற்றி தொடர்ச்சியாக மீளாய்வுகளை நடத்த வேண்டும். பிள்ளைகள் கட்டாயமாகப் படையிற் சேர்த்தல் உடனடியாக நிறுத்தப்பட வெண்டும்.

**4. முன்னேறிக் கொண்டிருக்கும் சமாதானச் செயல்முறை:-**

சமாதானச் செயன் முறையை முன்னெடுத்துச் செல்வதற்கென உருவாக்கப்பட்ட நிறுவனங்கள் பால் நிலைப்பாட்டு விவாத விடயங்கள் பற்றிய உணர்வுடையவையாக இருத்தல் வேண்டும்.

சமாதானமும் புணர்நிர்மாணம் தொடர்பாகத் தொகுக்கப்பட்ட சகல விபரங்களும் பால்நிலை அடிப்படையில் வேறுபடுத்தப்பட வேண்டும்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## மீள குடியமர்வு புணர்வாழ்வு புணர் நிர்மானம் என்பன தொடர்பான சிபார்சுகள்

**5. பெண்களும் இடப்பெயர்வும் :-** முகாம்களில் வாழும் பெண்களுக்கு தகுந்த ஆரோக்கிய வசதிகள், சுத்தமான நீரையும் எரிபொருளையும் பெறும் வசதி, மகப்பேற்று உடல் நலத் தேவைகள், வீட்டில் வன்செயல்கள் குறைக்கப்படுதல் என்பன உட்பட பல சேவைகள் தேவை. முகாம்களில் தீர்மானம் செய்யும் குழுக்களில் இடம் பெறும் உரிமை பெண்களுக்கும் இருக்க வேண்டும்.

**6. மீள் குடியமர்வும் புணர்நிர்மாணமும் :-** புணர்வாழ்வு , மீள் குடியமர்வு நிகழ்ச்சிச் திட்டங்கள் - பெண்கள் குடும்பத் தலைவிகளாக இருக்கும் விசேட சூழ்நிலைகளை கவனத்திற்கெடுத்து அவர்களின் தேவைகளை நிறைவேற்றவேண்டும்.

**7. நில உரிமை :-**
காணியையும் சொத்தையும் பரம்பரை உரிமையாகப் பெறுவதற்கும் அவற்றை விற்பதற்கும் பெண்கள் சமமான உரிமைகளைப் பெறுவதை உறுதிப்படுத்தும் விதத்தில் காணிச் சட்டங்கள் திருத்தியமைக்கப்பட வேண்டும்.

**8. நட்ட ஈடு :-** பெண்கள் தமக்குச் சேர வேண்டிய பொருட்களை பெறுவதற்கு லஞ்சம் கொடுக்கும்படி நெருக்கப்படுதலுக்கு ஆளாகாமல் இருப்பதற்கும், பாலியல் கோரிக்கைகளுக்கு உள்ளாகாமல் இருப்பதற்கும் நட்டஈட்டுக் கொடுப்பனவு, மீள் குடியமர்வு நன்மைகள் என்பன தொடர்பான முறைமைகள் ஒளிவு மறைவற்றவையாகவும் நன்கு பிரபலப்படுத்தப்பட்டவையாகவும் இருத்தல் வேண்டும்.

**9. சுகாதாரம்:-** சுகாதாரக்கல்வி, சுகாதார வளங்களை திட்டமிடுதலும் ஒதுக்கீடு செய்தலும் என்பவற்றில் பங்குபற்றுமாறு பெண்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

**10. கல்வி :-** சமத்துவம், பன்மைத்துவம், மனித உரிமைகள் என்பன போன்ற எண்ணக் கருக்கள் தொடர்பான பொதுமக்களுக்கான கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் அவசிமாகும். இவ்விடயங்கள் பாடசாலைகளிலும் கற்பிக்கப்பட வேண்டும்.

**11. கண்ணி வெடிகள்:-** கண்ணி வெடிகளின் பயன்பாட்டை அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் தடை செய்யும்படி தூண்டப்பட வேண்டும். ஓர் அவயத்தையோ அவயங்களையோ இழந்ததன் சமூக விளைவுகளைக் கையாளும் பெண்களின் ஆற்றல் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

**12. பெண்களின் சீவனோபாயங்கள். : -** முழுமையான வீச்சிலமைந்த தொழிற்திறன் பயிற்சிகளும் எந்தவித தொழில் வாய்ப்புக்களும் பால்வேறுபாடின்றி பெண்களுக்கு வழங்கப்பட வேண்டும்

**13. அரசியல் பிரதிநிதித்துவம்: -** சகல கட்சி அரசியல் அமைப்புகளிலும் அரசியற் தீர்மானங்களைச் செய்வதில், பங்குபற்றும் சந்தர்பங்கள் பெண்களுக்கு வழங்கப்பட வேண்டும். உள்ளூர் ஆட்சி மன்றங்களிலும் குறைந்த பட்சம் முப்பது சதவிதமான பிரதிநிதித்துவம் பெண்களுக்கென ஒதுக்கப்படுவது உறுதிப் படுத்தப்படும் விதத்தில் அர்த்த பூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

**14. கூடி இணைந்து நடப்பதற்கான சுதந்திரமும் விருப்பப்பட இயங்குவதற்கான சுதந்திரமும்: –**

தத்தமது அன்றாட பணிகளைச் செயவதற்கும் வருமானத்தை ஈட்டும் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கும் சுகாதார பராமரிப்பிற்காக சம்பந்தப்பட்டவர்களை அணுகுவதற்கும் மற்றும் நலன்புரி சேவைகளை பெறுவதற்கும் பெண்கள் சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் இயங்குவதற்கு வாய்ப்பிருக்க வேண்டும்.

**15. காணாமற் போதலும் கடமை செய்யும் போது காணாமற் போதலும்: –**
கடமை புரியும் போது காணாமற் போனோர் என்று தற்பொழுது கருதப்படுவோரின் முடிவைத் தெரியப் படுத்துவதற்கு சகல தரப்பினரும் அவசியப்படும் சகல முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டுமென்பதுடன் அத்தகைய தகவல்களை குடும்ப அங்கத்தவர்களுக்கு வழங்க வேண்டும்.

**16. பெண்களுக்கெதிரான வன்செயல்கள் : -** வன்முறைக்குள்ளாகிய பெண்களுக்கு ஆதரவளிக்கு முகமாக உறைவிடம், வைத்திய வசதிகள், அறிவுரை வசதிகள் தேவைப்படுகின்ற இடத்தில் சட்ட உதவி என்பன உட்பட நிகழ்ச்சித் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும்.

வன்முறையான குற்றங்களை பெண்களுக் கெதிராகச் செய்த குற்றவாளிகள் நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

*நன்றி*
*'பெண்களின் அக்கறைகளும் சமாதானச் செயன்முறையும்' முடிவுகளும் சிபார்சுகளும்.*

Published by
ISBN 955-9078-12-7

www.tamilarangam.net

6ம் பக்க தொடர்ச்சி......

1. இவ்வீதியிலும், அதேவேளை ஒலிவ் வீதியிலும் வசிக்கும் அத்தனை இல்லத்தாருக்கும், இவ்வீதியின் துப்பரவுத் தன்மை குறித்த 'விழிப்பு' ஏற்படும் வகையில், தங்களால் துண்டுப்பிரசுரமேதும் விநியோகிக்கப்படக் கூடுமானால் மிகவும் நல்லது. விநியோகிக்கப்படும் அதேவேளை, ஓர் அறிவுரையாகவும் சொல்லப்படலாம்.

2. ஓர் தினத்தைக் குறித்து, அத்தினத்தில் தாமாகவே முன்வரக்கூடிய அத்தனை இல்லத்தாரதும் ஒத்துழைப்புடன், ஓர் சிரமதானப் பணி மேற்கொண்டு, வீதியைத் துப்பரவு செய்து, அதன்பின்பு ஒருவரேனும் அவ்விடங்களில் குப்பை கொட்டாதவாறு அறிவுறுத்தல் பலகைகளை அவ்விடங்களில் நட்டுவிடுதல் நல்லது.

3 பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முகாமையாளருக்கு இது குறித்து நேரடியாகக் கதைத்து, அவர்களது சிற்றுண்டிச் சாலையிலிருந்து ஏறியப்படும் குப்பைகளைத் தடுக்க நடவடிக்கை எடுக்கலாம். அதேவேளை சந்திக்கு முன்னாலுள்ள தேனீர் கடை உரிமையாளரிடமும் சொல்லி, குப்பை போடுவதைத் தடுக்க முடியும்.

4. வீதியின் குறுக்காகப் போடப்பட்டுள்ள கான் உடைந்துபோயுள்ள நிலைகுறித்து வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு அறிவித்து, உடனடியாக அக் கானைத் திருத்தி முழு வீதியையும் மீண்டுமொருமுறை தார் ஊற்றி செப்பனிட அழுத்தத்தைக் கொடுக்கமுடியும்.

5. இயலுமானால், சக்தி தொலைக்காட்சியின் செய்தி வேளைகளில் ஒளிபரப்பாகும் 'சக்தியின் தேடலில்' பகுதியில் இதுகுறித்து ஒளிபரப்பி, அறிவிப்புச் செய்தலும் நல்லது.

இப்போதைக்குச் செயற்படுத்தப்படலாமென என் மனதுக்குள் உந்தப்பட்ட, மேற்குறித்த ஐந்து முயற்சிகளையும் தங்களால் செய்யக்கூடுமானால், நிச்சயம் இவ்வீதியின் துப்பரவுத்தன்மை பேணப்பட வாய்ப்பிருக்கிறது என நான் பூரணமாக நம்புகிறேன். தங்களால்தான் முடியும். தங்களால் மாத்திரந்தான் முடியும். ஏனெனில் அநேக விடயங்களை உருப்படுத்திய பெருமை உங்களையே சாரும். முழு நம்பிக்கையுடன் முன்னெடுப்போம். உங்கள் நற்பணிகளுக்காகப் பாராட்டுவதுடன் ,பணி தொடர வாழ்த்துகிறேன் .

நன்றி

இங்ஙனம்
உண்மையுள்ள
திருமதி. யு. ஜெயராஜா

---

சூரியா பெண்கள்
அபிவிருத்தி, நிலையம்

**"ஒரு சமூகத்தின் முயற்சி
அடுத்த சந்தததியின் வெற்றியாகும்"**

இச் சகோதரி போல இவ் வீதியின் துப்பரவு தன்மையில் அக்கறை உள்ளோர் பலர் இவ் வீதியில் வாழ்வதை நாம் அறிவோம். அத்துடன் அதிகாரம் மிக்க அரச உயர் பதவிகளில் வசிப்போர்களும் இவ் வீதியில் வாழ்கின்றனர், இவர்கள் இச் சகோதரியுடன் தொடர்பு கொண்டு அனைவரும் ஒன்று திரண்டு குறிப்பிட்ட நாளில் இவ்வீதியில் சிரமதான பணியில் ஈடுபடுவதை நாம் வரவேற்கிறோம். இதன்மூலம் சகோதரி, குறிப்பிட்டு சுட்டிக் காட்டப்பட்ட தவறுகள் மேலும் நடைபெறாமல் இருப்பதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை அனைவரும் கூடி தீர்மானிக்கலாம் அதற்கு இவ் வீதியில் வாழும் அனைவரும் இச் சகோதரிக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என கேட்டுக்கொள்கின்றோம்

நன்றி

ஆசிரியை



**ஈரமுள்ள இந் நாட்டின்
பசையுள்ள மண்ணை – நம் பாதங்கள்
பட்டுணர வேண்டாமோ.........
பல தூரம் நாம் செல்ல
வழி தேட வேண்டாமோ.........**

**சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்
இல. 20, டயஸ் வீதி,
மட்டக்களப்பு
தொ.பே. - 065-2223297**

முகவரி:- ..........................................
..........................................
..........................................
..........................................



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்